பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 05 2024 **WEDNESDAY** 12 40 **PM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கான நான்காம் கட்ட தேர்தல் நடைபெறும் 96 தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

2. ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள **Shaistar** வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் ஐந்தாவது நாளாக தீவிரவாதிகளை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

3. புதிய வகை தொற்றுகளுக்கு ஏற்ற வகையில் நவீன தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக கோவிஷீல்டு தடுப்பூசியை திரும்பப் பெறுவதாக அஸ்ட்ரா ஜென்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

4. தமிழகத்தில் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உயர்கல்வியில் சேர்வதற்கான 'கல்லூரிக் கனவு 2024' வழிகாட்டுதல் நிகழ்ச்சியை மாநில தலைமைச் செயலர் திரு. சிவ்தாஸ் மீனா இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

5. ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா 43 பதக்கங்களை பெற்றுள்ளது.

**>>>><<<<**

மக்களவைக்கான நான்காம் கட்ட தேர்தல் நடைபெறும் 96 தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி, தெலங்கானாவில் உள்ள கரீம்நகர் தொகுதிக்குட்பட்ட வெம்லுவாடா என்னுமிடத்தில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

பின்னர் ஆந்திர மாநிலம், வாரங்கல் செல்லும் அவர், அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ராகுல் காந்தி ஆகியோரும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் தமது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து ஷாஜஹான்பூரில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

>>>><<<<

மத்தியப்பிரதேச மாநிலம், பெதுல் தொகுதிக்குட்பட்ட கவ்லா கிராம வாக்குச்சாவடியிலிருந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை பேருந்தில் எடுத்துச் சென்ற போது, கோலா கிராமத்திற்கு அருகே பேருந்தில் தீ பிடித்து, விபத்து ஏற்பட்டது.

தீப் பிடித்த பேருந்திலிருந்து கண்ணாடியை உடைத்து. வாக்குச்சாவடி ஊழியர்கள் உயிர் தப்பினர்.

இந்த விபத்தில் நான்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தீயில் கருகியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள **Shaistar** வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் ஐந்தாவது நாளாக தீவிரவாதிகளை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை அன்று விமானப்படை வாகனத்தின் மீது, தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்குதல் தொடுத்ததை அடுத்து, அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் முகாமிட்டு, தொடர்ந்து சோதனை நடத்தி வருகின்றனர்.

ராணுவம் மற்றும் உள்ளூர் காவல்துறையினர் இணைந்து சனாய், சாஸ்தர், குர்சாய், சீன்தாரா ஆகிய இடங்களில் தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

பாதுகாப்புப் படையினர் ட்ரோன், ஹெலிகாப்டர் மற்றும் நவீன சாதனஙகளை கொண்டு அடர்ந்த வனப்பகுதியில் தேடுதல் பணியை மேற்கொண்டுள்ளனர்.

உள்ளூர் மக்களிடம் விசாரணை நடத்தியதில், இந்த தாக்குதலில் ஈடுபட்டதாக கருதப்படும் தீவிரவாதிகளின் அடையாளங்களை கண்டறிந்து வரைபடங்களை பாதுகாப்புப் படையினர் வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையே, இந்திய ராணுவத்தின் வடக்குப் பகுதி சீப் லெப்டினென்ட் ஜெனரல் நவீன் சச்தேவா, லெப்டினென்ட் ஜெனரல் சுசீந்திர குமார், ஆகியோர் தாக்குதல் நடந்த இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதன்பின்னர், அங்குள்ள ராணுவ உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

>>>><<<<

இந்திய கடற்படையின் ரியர் அட்மிரல் ராஜேஷ் தங்கர், சிங்கப்பூருக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு, ஒத்துழைப்பு மற்றும் நட்புறவை மேம்படுத்தும் விதத்தில் இந்தப் பயணம் அமைந்துள்ளதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் சென்றுள்ள ரியர் அட்மிரல் ராஜேஷ் தங்கர், அந்நாட்டு கடற்படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இருநாட்டு கடற்படையினருக்கு இடையேயான பயிற்சிகள் குறித்தும், கடற்பகுதியில் எழுந்துள்ள சவால்கள் குறித்தும் அவர் விவாதித்தார்.

>>>><<<<

ஹரியானா மாநிலத்தில் ஆளும் பிஜேபி அரசுக்கு கொடுத்து வந்த ஆதரவை விலக்கிக்கொள்வதாக மூன்று சுயேச்சை சட்டப்பேரவை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

3 பேரும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, திரு. ரன்தீர் கோலன், திரு. தர்மாபால் ஹோண்டர், திரு. சோம்பீர்சிங் சங்வான் ஆகிய 3 சுயேச்சை சட்டப்பேரவை உறுப்பினர்களும், அம்மாநில ஆளுநர் திரு. பண்டாரு தத்தாத்ரேயாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

விவசாயிகளின் நலன் கருதியும், விலைவாசி உயர்வு மற்றும் வேலையில்லா திண்டாட்டம் காரணமாகவும், பிஜேபி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை தாங்கள் விலக்கிக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், 3 சுயேச்சை சட்டப்பேரவை உறுப்பினர்களின் இந்த முடிவு அரசியல் ரீதியாக எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி தெரிவித்துள்ளார்.

இந்த 3 பேரின் முடிவின் காரணமாக, அரசுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றும், மொத்தம் 90 உறுப்பினர்களில் 47 உறுப்பினர்களின் ஆதரவு அரசுக்கு உள்ளதாகவும் அம்மாநில முதலமைச்சரின் செயலர் திரு. பர்வின் ஆத்ரே கூறியுள்ளார்.

>>>><<<<

ஏர் இண்டியா விமான ஊழியர்கள் போராட்டம் காரணமாக, துபாய், தோஹா, குவைத் உள்ளிட்ட பல நாடுகளுக்குச் செல்லும் விமானங்கள் முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்பட்டுள்ளன.

கேரளாவில் நேற்று ஏர் இண்டியா நிறுவனத்தின் பொறியியல் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் திடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், கொச்சி சர்வதேச விமான நிலையத்திலிருந்து சார்ஜா, பஹ்ரைன், மற்றும் மஸ்கட் செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

மேலும், கன்னூர் சர்வதேச விமான நிலையத்தில் போராட்டத்தில் ஏர் இண்டியா ஊழியர்கள் ஈடுபட்டதால், 400க்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்ய இயலாமல் சிரமத்திற்கு உள்ளாகினர்.

இந்த போராட்டம் காரணமாக, நாடுமுழுவதும் உள்ள பிற விமான நிலையங்களிலும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

>>>><<<<

கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு புதிய தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டதால், அஸ்ட்ரா ஜென்கா நிறுவனம், கோவிஷீல்டு தடுப்பூசியை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

அஸ்ட்ரா ஜென்கா நிறுவனமும், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமும் இணைந்து தயாரித்த கோவிஷீல்டு தடுப்பூசி, பல கோடி மக்களின் உயிரை காப்பாற்றியதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது, புதிய வகை தொற்றுகளுக்கு ஏற்ற வகையில், புதிய தடுப்பூசிகள் வந்துவிட்டதால், கோவிஷீல்டு தடுப்பூசியை திரும்பப் பெறுவதாக அந்நிறுவனம் கூறியுள்ளது.

உலகம் முழுவதும் 300 கோடி கோவிஷீல்டு டோஸ்கள் வழங்கப்பட்டதாக அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உயர்கல்வியில் சேர்வதற்கான ‘கல்லூரிக் கனவு 2024’ வழிகாட்டுதல் நிகழ்ச்சியை மாநில தலைமைச் செயலர் திரு. சிவ்தாஸ் மீனா இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

சென்னையில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கில் இந்த நிகழ்ச்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், அனைத்து மாணவர்களும் தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி உயர்கல்வி பயில வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மாணவர்கள் நன்றாக படித்து தமிழகத்திற்கு பெருமை தேடித்தர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சி திருச்சி, கோயம்புத்தூர், நாகப்பட்டினம், மதுரை, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் இன்று தொடங்கியது.

வரும் 13ஆம் தேதி வரை இந்த வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

>>>><<<<

தமிழகத்தில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு, மனநல ஆலோசனைகளை வழங்க மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

தமிழகத்தில் நேற்று முன்தினம் 12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன.

இதில் 51 ஆயிரத்து 919 மாணவர்கள் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை.

இந்த மாணவர்களுக்கு தற்போது மனநல ஆலோசனைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மனநல ஆலோசனைகளைப்பெற உதவி எண் 104 மற்றும் 14416 என்ற உதவி எண்களை தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் இணையதள வசதியை ஏற்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கற்றல் கற்பித்தல் முறையை எளிதாக்கும் வகையிலும், காணொலிவாயிலாக மாணவர்கள் புதுவித அனுபவம் மற்றும் உத்வேகத்துடன் கல்வி பயிலும் விதத்திலும் பள்ளிகளில் இணையதள வசதி ஏற்படுத்தப்படுகிறது என்று தமிழக அரசு கூறியுள்ளது.

அரசு பள்ளிகளில் இணைய வேகத்தை 100 **mbps** என்ற அளவில் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**BSNL** நிறுவனத்துடன் இணைந்து, அரசு பள்ளிகளில் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் உள்ள 6 ஆயிரத்து 223 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில்

இதுவரை 5 ஆயிரத்து 907 பள்ளிகளில் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், 6 ஆயிரத்து 992 நடுநிலைப் பள்ளிகளில் 3 ஆயிரத்து 267 பள்ளிகளில் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் உள்ள 24 ஆயிரத்து 338 தொடக்கப்பள்ளிகளில் 8 ஆயிரத்து 711 பள்ளிகளில் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 19 ஆயிரத்து 668 பள்ளிகளில் இம்மாத இறுதிக்குள் இணையசேவை வழங்கும் பணி நிறைவடையும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது

**>>>><<<<**

தமிழக அரசு விரைவு பேருந்துகளில் மின்னணு முறை மூலம் பயணச்சீட்டு பெறும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குளிர்சாதன பேருந்துகள் உட்பட ஆயிரத்து 68 பேருந்துகளில் **Gpay, Phonepay** மூலம் கட்டணத்தை செலுத்தி பயணச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம் என்று அரசு போக்குவரத்துக்கழகம் தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

வங்கிக் கடன் மோசடியில் வெளிநாடு தப்பிச் சென்றுள்ள நீரவ் மோடியின் ஜாமீன் மனுவை இங்கிலாந்து நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஜாமீன் வழங்கப்பட்டால், அவர் விசாரணையிலிருந்து தப்பிச் செல்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக கூறி, ஜாமின் மனுவை அந்நாட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக லண்டன் சிறையில் இருக்கும் நீரவ் மோடி, ஜாமின் கேட்டு நேற்று லண்டன் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார்.

பஞ்சாப் நேஷனல் வங்கியில் நீரவ் மோடியும், அவரது உறவினர் மெக்குல் ஜொக்ஸியும் இணைந்து 14 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மோசடியில் ஈடுபட்டதால், 2019ஆம் ஆண்டு அவர்கள் நாட்டை விட்டு தப்பிச் சென்றனர்.

>>>><<<<

சர்வதேச செஞ்சிலுவை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஒவ்வோராண்டும் மே மாதம் 8ஆம் தேதி, சர்வதேச செஞ்சிலுவை தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

160 ஆண்டுகளுக்கு முன்பாக, சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி டுடன்ட் என்பவரால் தொடங்கப்பட்ட இந்த அமைப்பின் மூலம் இதுவரை 8 கோடி பேருக்கு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

>>>><<<<

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா 43 பதக்கங்களை வென்றுள்ளது.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்ற இப்போட்டியில், ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்திய வீரர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டியில் 12 தங்கம், 14 வெள்ளி மற்றும் 17 வெண்கலப்பதக்கங்களை இந்தியா வென்று, பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

கஜகஸ்தான் 48 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.

>>>><<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி ஹைதராபாதில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>><<<<

கிராண்ட் செஸ் போட்டி போலந்தில் இன்று தொடங்குகிறது.